# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜாமக்காரன்

JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1 தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15

**VOLUME - 9 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 4**
**APRIL 2025 TAMIL & MALAYALAM**
**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**

Mob.: No. **9894261333**
0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com

கர்த்தருக்குள் அன்பான வாசகர்களுக்கு,



என் உடல் நிலை சீராகும் வரை ஜாமக்காரன் பத்திரிகை **தாமதமாகவே உங்கள் கைக்கு** வந்து சேரும்.

நான் வெளி ஊர்களுக்கு கன்வென்ஷனில் பேச இயலாவிட்டாலும் பத்திரிகை வாயிலாக வாசகர்களின் வீட்டுக்கு வர இயலும். உங்கள் வேதாகம சந்தேகங்களுக்கு பத்திரிகை வழியாக பதில் அளிக்க முடியும்.

கர்த்தர் அதற்கான கிருபை அளித்து என்னை பெலப்படுத்தி கொண்டிருக்கிறார். அதற்காக தேவனை துதிக்கிறேன்.

உங்களுக்காக உங்கள் ஜெப விண்ணப்பங்களுக்காக தொடர்ந்து ஜெபிக்கிறேன். நான் வெளியே எங்கும் போகாமல் வீட்டிலேயே இருப்பதால் அதிக நேரம் ஜெபிக்க முடிகிறது.

கர்த்தரின் கிருபை உங்களோடிருப்பதாக. ஆமென்.

**- Dr. புஷ்பராஜ்**

# APRIL- 2025



# நீதிமொழிகளின் புத்தகம்

வேதப் புத்தகத்திலுள்ள **செய்யுள் புத்தகங்களில்** ஒன்று **நீதிமொழிகளின்** புத்தகம் **யோபு, சங்கீதம், நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதப்பாட்டு** இவை எல்லாமே **எபிரேய செய்யுள்கள்.** நீதிமொழிகள் பிரசங்கி உன்னதப்பாட்டு இந்த மூன்று புத்தகங்களையும் எழுதியது சாலொமோன், சாலொமோன் நீதிமொழிகளில் **ஞானத்தைப்** பற்றியும், பிரசங்கியில் **மாயையைப்** பற்றியும், உன்னதப்பாட்டில் **நேசத்தைப்பற்றியும்** எழுதியிருக்கிறார். இந்த மூன்று சத்தியங்களைக் குறித்தும் நன்றாக அறிந்திருந்தவர் சலலொமோன். அவன் மூவாயிரும் நீதிமொழிகளைச் சொன்னான். அவனுடைய பாட்டுகள் ஆயிரத்து ஐந்து எ ன்று சாலொமோனைக் குறித்து 1இராஜாக்கள் 4:32ல் வாசிக்கிறோம். **சாலொமோனின்** நிதிமொழிகளில் **குறைவான நிதிமொழிகளே** நம்முடைய கரங்களில் இருக்கின்றன. லீபனோனில் இருக்கிற கேதுருமரங்கள் முதற்கொண்டு சுவரில் முளைக்கிற ஈசோப்புப் பூண்டுவரைக்குமுள்ள மரமுதலிய **தாவரங்களைக்** குறித்தும் **மிருகங்கள் பறவைகள் ஊரும் பிராணிகள் மச்சங்கள்** ஆகிய இவைக்குறித்தும் வாக்கியங்களைச் சொன்னான். சாலொமோனின் ஞானத்தை குறித்துக் கேள்விப்பட்ட பூமியின் சகல ராஜாக்களிடத்திலுமிருந்து நானாஜாதியான ஜனங்களும் அவனுடைய ஞானத்தைக் கேட்கிறதற்கு வந்தார்கள். (1 இராஜாக்கள் 4:33,34)

நிதிமொழிகளின் புத்தகத்தில் சாலொமோனின் ஞானத்தைக் குறித்துப் பார்க்கிறோம். நீதிமொழி என்பது ஒரு குறிப்பிட்ட சத்தியத்தை மிகத் தெளிவாகச் சொல்லும் ஒரு வாக்கியம். நீண்ட அனுபவத்தை அடிப்படையாக வைத்து சிறு வாக்கியங்களாக எழுதப்பட்டவை. நீதிமொழிகள் கூறும் சத்தியங்கள் மிக எளிதாக நினைவில் நிற்கக்கூடியவை. அவை அனுபவத்தின் அடிப்படையில் வந்த தத்துவங்கள். அவை நன்னடக்கைகான சட்டங்கள் தமிழ் மொழியிலேயும் இப்படி ஆழமான சத்தியங்களைச் சுருக்கமாகச் சொல்லும் பல **பழமொழிகள் உண்டு.**

நீதிமொழிகள் புத்தகத்தின் **கருத்து வாக்கியம்** நீதிமொழிகள் முதலாம் அதிகாரம் 7ம் வசனத்தில் காணப்படுகிறது. கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம். மூடர் ஞானத்தையும் போதகத்தையும் அசட்டை பண்ணுகிறார்கள். கிழக்கத்திய நாடுகளிலிருந்து முதன் முதலாவதாக நீதிமொழிகள் உருவாகியிருக்கின்றன. சாலொமோன் பல

இடங்களிலிருந்து அவற்றைக் சேகரித்து வைத்திருந்திருக்கிறார். அவைகள் எல்லாவற்றையும் ஒருங்கிணைத்து ஒழுங்குபடுத்தியிருக்கிறார். அவரும் சில நீதிமொழிகளைக் கூறியிருக்கிறார். சாலொமோன் சேர்த்து வைத்த நீதிமொழிகளில் தேவன் தம்முடைய முத்திரையைப் பதித்தபடியினாலே அவைகள் வேத புத்தகத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நீதிமொழிகளின் புத்தகத்தில் காணப்படும் நீதிமொழிகளுக்கும் மற்ற எழுத்தாளர்களின் நீதிமொழிகளுக்கும் ஒரு வேறுபாடு இருக்கிறது. **கிரேக்கர்கள்** நீதிமொழிகளை எழுவதில் மிகவும் சிறந்தவர்கள். மேலும் கிரேக்கக் கவிஞர்கள் கிரேக்க மொழியில் புலமை பெற்றவர்கள். மொழி ஜாலம் அவர்கள் நீதிமொழிகளில் வெளிப்படுகின்றன.

## நீதிமொழிகள் புத்தகத்தின் சில குணநலன்கள்

1. அறிவியலுக்கு அப்பாற்பட்ட எந்தக் காரியமும், உண்மையற்ற எந்த ஒரு காரியமும் நீதிமொழிகளில் காணமுடியாது. உதாரணமாக **எல்லாக் காவலோடும்** உன் **இருதயத்தைக் காத்துக்கொள்.** அதினிடதினின்று ஜீவ ஊற்றுப் புறப்படும்? (நீதிமொழிகள் 4:23) இது குறிப்பிடத்தக்க ஒரு வாக்கியம், ஏனென்றால் 2700 ஆண்டுகளுக்கு பின்னர் **ஹார்வே** என்பவருடைய கண்டுபிடிப்பின்படி **இருதயம் துடிக்க** அதாவது உந்தித்தள்ள **இரத்தம்** உடலைச் சுற்றி ஓடுகிறது. அதற்குக் காரணம் **இருதமாகிய மோட்டார்** இதற்கு எதிர்மறையாக தள்ளுபடி ஆகமத்தில் **பர்ணபாவின்** நிரூபத்தில் போலியான கதைகள் இருக்கின்றன. **புராணப் பறவை** ஃபீனிக்ஸ் தன்னைத்தானே தீயினால் அழித்துக்கொண்டு **மீண்டுமாக உயிர்தெழுந்து** வருவதுபோல கூறப்பட்டுள்ளது. ஆனால் **நீதிமொழிகளின்** புத்தகத்தில் அப்படிப்பட்ட எந்த ஒரு **உண்மையற்ற காரியமும்** சொல்லப்படவில்லை. நீதிமொழிகளின் புத்தகம் பழமையான புத்தகமாக இருந்தாலும் இன்றய **விஞ்ஞானத்திற்கு எதிரான** எந்த ஒரு வாக்கியமும் அங்கே இல்லை. எனவே சிந்திக்கும் திறன்கொண்ட எந்த மனிதமும் தேவனின் உந்துதலால் நீதிமொழிகளின் புத்தகம் எழுதப்பட்டது என்பதை ஒத்துக்கொள்வான்.

2. ஒரு உயர்வான **ஒழுக்கநெறியை** இந்தப் புத்தகம் நமக்குத் காட்டுகிறது. மற்ற புத்தகங்களில் காணப்படும் ஒழுக்கமற்ற வாக்கியங்கள் இங்கே இல்லை. **ஜஸ்டின் மார்டின்** என்பவர் **சாக்ரடீஸ்** கிறிஸ்துவிற்கு முன்னாலே வந்த கிறிஸ்தவர் என்று கூறுவார். **இது சாத்தியமற்றது.** சாக்ரடீஸ் உயர்வான ஒழுக்க நெறியைப்பற்றி கூறியிருக்கிறார் என்று அவரது அபிமானிகள் சொல்கிறார்கள். விபசாரிகள் எப்படி நடக்க வேண்டும் என்று சாக்ரடீஸ் விபசாரத்தில் ஈடுபடும் பெண்களுக்கு அறிவுரை வழங்கியிருக்கிறார். இப்படிபட்டவரை

ஒழுக்கக் கேடான காரியங்களைக் கூறியவர் என்றுதான் கூற முடியும். ஆனால் நீதிமொழிகளின் புத்தகம் முழுவதிலேயும் உயர்வான ஒழுக்க நெறியை நாம் பார்க்கலாம்.

3 நீதிமொழிகள் ஒன்றுக்கொன்று எதிர்மறையான எந்த காரியத்தையும் சொல்லவில்லை.

நீதிமொழிகள் புத்தகத்தில் எந்தக் கருத்தும் தொடர்ச்சியாக சொல்லப்படாவிட்டாலும் நாம் அதை முறையாகப் படிக்கும் பொழுது அதுவும் ஒரு சரித்திரத்தைப்போல் அமைந்திருக்கிறதைக் கண்டுகொள்ளலாம். நீதிமொழிகளின் புத்தகம் வாழ்கையினுள் அடியெடுத்து வைக்கும் ஒரு இளைஞனின் வாழ்க்கையைச் சித்தரிக்கிறது. அவன் தன் முதலாவது பாடத்தை நீதிமொழிகளின் புத்தகம் **முதலாவது** அதிகாரம் *7வது வசனத்தில்* பெற்றுக்கொள்கிறான். இதுவே இந்தப் புத்தகத்தின் கருத்து வாக்கியமாகும்.

நீதிமொழிகளின் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகள் எல்லா இடங்களுக்கும், **காலங்களுக்கும்** பொருந்தும் ஒரு மனிதன் பழைய ஏற்பட்டுக் காலத்தில் வாழ்ந்தாலும் சரி. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்ந்தாலும் சரி. புதிய எருசலேமில் இப்பொழுது வாழ்ந்தாலும் சரி, இதில் கூறப்பட்ட சத்தியங்கள் எல்லாம் அவனுக்குப் பொருந்துகின்றன. எல்லா மனிதர்களுக்குமான சிறந்த ஒரு புத்தகம் இது. இந்தப் புத்தகத்தில் நற்செய்தியே சொல்லப்படவில்லை என்று சிலர் சொல்லலாம். ஞானம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைத் தவிர வேறு யாரும் அல்ல. ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத வாக்கியங்களினாலே ஆக்கப்பட்ட புத்தகம் அல்ல இது. அரசர்களின் மேடைப்பேச்சும் அல்ல. மிகவும் அர்த்தமுள்ள ஒழுங்காக அமைக்கப்பட்ட ஒரு புத்தகம். சாலொமோன் தன் போதனைகளைக் குறித்து இவ்வாறு கூறியிருக்கிறார். மேலும் பிரசங்கி ஞானவானாயிருந்தபடியால் அவன் ஜனத்துக்கு அறிவைப் போதித்து கவனமாக கேட்டாராய்ந்து அநேகம் நீதிமொழிகளை சேர்த்து எழுதினான். (பிரசங்கி 12:9) நீதிமொழிகளின் புத்தகம் உங்கள் வாழ்க்கையை அற்புதமான அனுபவம் நிறைந்த வாழ்க்கையாக்கும்.

வேத புத்தகத்தில் காணப்படும் ஒவ்வொரு தனி மனிதனுடைய குணநலனும் ஒவ்வொரு நிதிமொழியில் பிரதிபலிக்கின்றது அவைகளில் சிலவற்றை நான் கூறுகிறேன். மற்ற மனிதர்களைக் குறித்து நீங்களே கண்டு கொள்ளுங்கள். நீதிமொழிகளைப் படிக்கும்பொழுது உங்களுக்குத் தெரிந்த பலருடைய முகங்கள் உங்கள் கண் முன்னே வரும். ஒருவேளை அவர்கள் முகத்திற்கு நேராக நீங்கள் சொல்லாவிட்டாலும் நீங்கள் அந்த வசனங்களை வாசிக்கும்பொழுதெல்லாம் அவர்கள் உங்கள் ஞாபகத்திற்கு

வருவார்கள். நம் ஒவ்வொருவருக்கும் பொருத்தமான நீதிமொழிகளும் உண்டு. நீதிமொழிகளின் புத்தகத்தைப் படிக்கிறது உங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கும். நீதிமொழிகள் **இரண்டு அடி செய்யுளாக** அமைந்திருக்கின்றன. இவை ஒன்றொடொன்று தொடர்புடைய கருத்துக்களைக் கூறுகின்றன. **தமிழ் செய்யுள்களைக் போல** கவிதை நடையில் அல்லது உச்சரிப்பில் ஒன்றுபோல வராது. **எபிரெய** செய்யுள்கள் **ஈரடி செய்யுள்களாகவும்** இணைக்கருத்துள்ள **செய்யுள்களாகவும்** அமைக்கப்பட்டிருக்கின்றன. இணைக்கருத்துள்ள எபிரேய செய்யுள்களை மூன்று விதமாகப் பிரிக்கலாம்.

## 1. ஒரே அர்த்தத்தைக் கொடுக்கும் இணைக்கருத்துள்ள செய்யுள்.

முதல் வரியும் இரண்டாவது வரியும் ஒரே அர்த்தத்தைக் கொடுக்கும். ஆனால் வெவ்வேறு வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருக்கும். உதாரணமாக பரியாசக்காரருக்குத் தண்டனை களும் மூடருடைய முதுகுக்கு அடிகளும் ஆயத்தமாயிருக்கிறது. (நீதிமொழிகள் 19:29)

## 2. எதிர்மறையான இரண்டு காரியங்கள் சொல்லப்படும்.

நீதிமான்களின் வெளிச்சம் சந்தோஷிப்பிக்கும் துன்மார்க்கரின் தீபமோ அணைந்துபோம். (நீதிமொழிகள் 13:9) இந்த வசனத்தின் இரண்டாவது வாக்கியமும் முதல் வாக்கியத்தின் கருத்தையே சொல்கிறது. இது எதிர்மறையாகச் சொல்கிறது. அதுதான் அந்த வித்தியாசம்.

## 3. விவரித்து சொல்லும்

முதல் வாக்கியத்தில் வரும் சத்தியம் **இரண்டாவது** வாக்கியத்தில் விபரமாகச் சொல்லப் பட்டிருக்கும். **ராஜாவின்** உருக்குதல் சிங்கத்தின் கெர்ச்சிப்புக்கு சமானம். **அவனைக்** கோபப்டுத்துகிறவன் **தன் பிராணனுக்கே** துரோகஞ் செய்கிறான். (நீதிமொழிகள் 20:2)

### அட்டவனை

1. அதிகாரம் 1-9 ஞானமும் மதியீனமும் வேறுபடுத்திக் காட்டப்படுகின்றன.
2. அதிகாரம் 10:24 சாலொமோனின் நீதிமொழிகள் ( சாலொமோனே எழுதி தொகுத்து வரிசைப்படுத்தியவை).
3. அதிகாரம் 25:29 சாலொமோனின் நீதிமொழிகள் (எசேக்கியா ராஜாவின் மனுஷர் ஒழுங்குபடுத்திய சாலொமோனின் நீதிமொழிகள்)
4. அதிகாரம் 30 ஆகூர் உரைத்த உபதேசங்கள்
5. அதிகாரம் 31 லேமுவேலுக்கு அவருடைய தாயின் நீதிமொழிகள்

## அதிகாரம் 1

நீதிமொழிகளின் புத்தகம் சுவராஸ்யமான கதையைப்போல இல்லைஎன்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் பரிசுத்த ஆவியானவரின் துணையோடு இதை வாசித்தால் நம் ஒவ்வொருவருக்கும் தேவையான அருமையான செய்திகள் இங்கே அடங்கியிருப்பதை நாம் கண்டுகொள்ளலாம். குறிப்பாக **இளைஞர்களுக்கும். இளம் பெண்களுக்கும்** மிக அவசியமான ஒரு புத்தகம் இது. இன்றைக்கு இளைஞர்கள் தங்கள் வாழ்க்கையின் கேள்விக்கான பதிலை எங்கெங்கோ தேடுகிறார்கள் . ஆனால் இளைஞர்களின் வாழ்க்கையின் கேள்விக்கான பதில்கள் இங்கே மிகத்தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. தனித்தனி வசனமாக எடுத்தும் இதை புரிந்துகொள்ளலாம். இது எந்த சூழ்நிலையில் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து அருகிலிருக்கும் மற்ற வசனங்களோடு சேர்த்தும் புரிந்துகொள்ளலாம்.

ஒரு வைரக்கல் வைக்கப்பட வேண்டிய இடத்தில் அது வைக்கப்ட்டு பார்க்கும்பொழுது அதன் முழு அழகையும் நாம் அனுபவிக்க முடியும். இங்கே அது வைக்கப்பட்டுள்ள இடம் நீதிமொழிகளின் புத்தகம் நீதிமொழிகளின் புத்தகத்தில் 31 அதிகாரங்கள் இருப்பதினால் மாதத்தின் ஒவ்வொரு நாளும் இதில் ஒவ்வொரு அதிகாரத்தை வாசிக்கும்படியாக இளைஞர்கள் ஊக்குவிக்கப் படுகிறார்களா. மற்ற வேதப்பகுதிகளை நீங்கள் முறையாக வாசிக்கும்பொழுதும்கூட இந்த பகுதியையும் நீங்கள் அதோடு இணைத்து வாசிக்கலாம். இது நிச்சயமாக ஒவ்வொரு நாளும் உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

### நீதிமொழிகள் 1:1

மிகத் தெளிவாக **இந்தப் புத்கத்தை எழுதியது** சாலொமோன் என்று குறிப்பிடப்பட்டுள்து. சாலொமோன் பல இடங்களிலிருந்து **சில நீதிமொழிகளை தொகுத்து** வழங்கியிருக்கிறார். சிலவற்றை **அவரே எழுதியிருக்கிறார்.** இந்தப் புத்தகத்தில் நாம் பார்க்கிறதைவிட மிக அதிகமான நீதிமொழிகளை அவர் எழுதியிருக்கிறார். நீதிமொழிகளின் முதல் பகுதி முதலாம் அதிகாரம் முதல் ஒன்பதாம் அதிகாரம் வரை. இதில் ஞானமும் மதியீனமும் வேறுபடுத்திக் காட்டப்பட்டிருக்கின்றன. ஒரு இளைஞன் தன் வாழ்க்கையின் ஆரம்பப் படிகட்டுகளில் நிற்கும்பொழுது தேவன் அவனுக்கு கொடுக்கும் ஆலோசனைகளைப் பாருங்கள்.

### நீதிமொழிகள் 1:2

இங்கே **ஒரே அர்த்தத்தைக்** கொடுப்பதைப்போலத் தெரிகிற **பத்து வார்த்தைகளை**

நாம் பார்க்கிறோம் ஒவ்வொரு வார்த்தையையும் நாம் தியானிக்கலாம். **இவை ஒன்றுபோல** தெரிந்தாலும் ஒவ்வொருன்றும் வெவ்வேறு **ஆழமான அர்த்தத்தைக்** கொடுக்கிறது. அவைகளில் சிலவற்றை மட்டும் கூர்மையாகக் கவனிப்போம்.

**ஞானத்தை அறிந்து** : ஞானம் என்றால் என்ன? வேத புத்தகத்தின்படி **அறிவை சரியானபடி பயன்படுத்தும் திறமையே ஞானம்.** இது வேதப்புத்தகத்தில் மிகவும் முக்கியமான ஒரு வார்த்தை. அறிவில் சிறந்த பலர் இருக்கிறார்கள் என்றாலும் அவர்கள் எல்லாரும் ஞானம் உள்ளவர்கள் இல்லை. அவர்களுடைய அறிவை அவர்கள் சரியான விதத்தில் பயன்படுத்துவதாகத் தெரிவில்லை.

பழைய ஏற்பாட்டில் **ஞானம்** என்பது இன்று ஒரு விசுவாசியினுடைய வாழ்க்கையில் **இயேசு கிறிஸ்துவாகும்,.** அவரே தேவனால் **நமக்கு ஞானமு**ம் நீதியும் **பரிசுத்தமும்** மீட்புமானவர் (1கொரிந்தியர் 1:37) இந்த அட்டவனையில் ஞானமே முதலாவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இன்று வாழும் விசுவாசியின் வாழ்க்கையில் கிறிஸ்துவே **ஞானமாக** இருக்கிறார். ஞானத்தை அறிந்துகொள்வது என்றால், இயேசு கிறிஸ்துவை அறிந்துகொள்ளுதலாகும். இதையே அப்போஸ்தலனாகிய பவுலும் தனது குறிக்கோளாகக் கொண்டிருந்தார். இதை பிலிப்பியர் 3ம் அதிகாரம் 10ம் வசனத்தில் கூறியிருக்கிறார். இந்தக் குறிக்கோள் இன்று நமக்கும் தேவை.

கிறிஸ்துவை நாம் மேலும் மேலும் அறிந்துகொள்ள வாஞ்சிப்பது ஞானத்தை அறிந்துகொள்வதற்கு சமமானமதாக இருக்கிறது. எனவே ஞானம் தான் இயேசு கிறிஸ்து. ஞானம் என்றால் அறிவை சரியாகப் பயன்படுத்தும் திறமை. ஒருவன் **இயேசு கிறிஸ்துவை** அறிந்திருந்தால் **அவன் முட்டாளாக இருக்கப்போவதில்லை.** அவன் ஞானமுள்ளவனாக இருப்பான். நீங்கள் மிகப் பிரகாசமான அறிவுள்ளவர்களாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் ஆண்டராகிய இயேசு கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்பொழுது கிறிஸ்துவை நீங்கள் அறிந்துகொள்ளும் பொழுது **நீங்கள் ஞானத்தைப்பெற்றுக்கொள்வீர்**

**போதகம் :** போதகம் என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள இந்த **எபிரேய வார்த்தை** சில இடங்களில் **தண்டனையைக்** குறித்துப் பேசுகிறது. உதாரணமாக **பிரம்பைக்** கையாடாதவன் தன் மகனை பகைக்கிறான். அவன்மேல் அன்பாயிருக்கிறவனோ அவனை ஏற்கனவே **தண்டிக்கிறான்** (நீதிமொழிகள் 13:24) இங்கேயும் தண்டிக்கிறான் என்பது **போதிக்கிறான்** என்கிற அர்த்தத்தில்தான் வருகிறது. எனவே **போதனை** என்பது

ஒழுக்கப்படுத்திக் கற்றுக்கொடுப்பது. **தண்டித்தும்** கற்றுக்கொடுப்பது, இன்று இது மறக்கப்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு சத்தியமாகும்.

இன்று இந்த சத்தியத்துக்குக் கீழ்ப்படியும் குடும்பங்கள் மிகக் குறைவு . இந்த வார்த்தையை மதிக்கும் தலைமை இடங்களும் மிகக்குறைவு. இன்றைக்கு சட்டத்தை மீறுகிறவர்கள் ஒழுக்கப்படுத்தும்படியாக அவர்கள் வாழக்கையில் ஒரு மறுமலர்ச்சி உண்டுபண்ணும்படியாக சிறையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகின்றது. ஆனால் கர்த்தருடைய வார்த்தையின்படி அது குற்றவாளிகளைக் கையாளும் முறை அல்ல. அவர்களுக்குத் தண்டனை கொடுக்கவேண்டும். ஆனால் உங்கள் மகனை நீங்கள் ஒழுக்கப்படுத்த வேண்டும். நீங்கள் அவனைத் தண்டிக்க வேண்டும். அந்த ஒழுக்கப் படுத்தலின் மூலமாக அவன் கற்பிக்கப்பட வேண்டும்.

குடும்பத்தில் பிள்ளைகளுக்கு அடி கொடுப்பது அல்லது **சிட்சிப்பது** அவர்களை தண்டிப்பதற்காக அல்ல. அவர்களுக்குக் **கற்றுக்கொடுப்பதற்காக,** பிள்ளைகள் தவறு செய்யும்பொழுது செய்த தவறுக்காக தண்டனையாக அவர்கள் **சிட்சிக்கப்படகூடாது.** அவர்கள் **கற்றுக்கொள்ளப்படவேண்டும்** என்பதற்காகத்தான் சிட்சிக்கப்படவேண்டும். ஆனால் இந்நாட்களில் நாம் குற்றவாளிகளை ஒழுங்குபடுத்த முயல்கிறோம். ஆனால் பிள்ளைகளை தண்டிக்கிறோம். தேவனுடைய வழிமுறைக்கு நாம் கீழ்படியவேண்டும். இன்றைய நாட்களில் எந்தப் பெற்றோரிடத்திலாவது உங்கள் பிள்ளைகளை நீங்கள் அடிக்கிறீர்களா என்று கேட்டால் தற்பாதுகாவலுக்காக நான் சில வேளைகளில் அடிக்க வேண்டியதிருக்கிறது என்று சொல்கிறார்கள் **பிள்ளைகள் பெற்றோரை வளர்க்கிறவர்களாயிருக்கிறார்கள்** பிள்ளைகள் பெற்றோர்களை அடித்து அவர்கள் என்ன செய்யவேண்டும் என்ன செய்யக்கூடாது என்று சொல்லும் நிலைமைக்கு நம்முடைய சமுதாயம் போய்கொண்டு இருக்கிறது.

போதனை என்பது ஒழுக்கப்பட்டுத்திக் கற்றுக்கொடுப்பது. நம்முடைய பரம பிதா இந்தக் காரியத்தை சிறப்பாக செய்கிறார். நம்மில் பலருடை வாழ்க்கையில் ஆண்டவர் நம்மை தண்டித்து போதித்ததை நாம் கற்றுக்கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட பாடங்கள் நாம் மறக்க முடியாத பாடங்களாக இருக்கிக்றன.

**புத்திமதி** என்று சொல்லப்பட்டிருப்பது **சுயபுத்தி** அல்லது **சொந்த புத்தியை** குறிக்கிறது.

## நீதிமொழிகள் 1:3,4

**நீதி** இது சரியான நடத்தையைக் குறிக்கிறது. நேர்மையான காரியம் சரியான காரியம் என்றால் எது என்று சிலர் கேள்வி கேட்கலாம். கர்த்தர் எதை சரி என்று சொல்கிறாரோ அதுவே சரியான காரியம். அதுவே நீதியாகும். அவரே ஒளியையும் இருளையும் வெவ்வேறாகப் பிரித்தவர். சூரியன் நாம் இருக்கும் பிரதேசத்தில் பிரகாசிக்கும்படியாகச் செய்ய நம்மால் முடியாது. சூரியனை நாம் விரும்புகிற நேரத்தில் மறையப்பண்ணவும் நம்மால் முடியாது. தேவனே அண்டசராசரங்களையும் ஆண்டு வருகிறார். அவரே வெளிச்சத்தை உண்டு பண்ணுகிறார். அவரே இருளையும் உண்டாக்குகிறார். அவரே எது சரி எது தவறு என்பதைக் கூறுகிறார்.

எனவே இதைச்செய்வது சரியா. இதைச் செய்வது தவறா என்று நீங்கள் கேட்பீர்கள் என்றால் வேதம் எதை சரி என்று சொல்லியிருக்கிறதோ அதுவே சரி. தேவன் எதை தவறு என்று சொல்கிறாரோ அது தான்தவறு. பொதுவாக இந்த உலகத்தில் எல்லாரும் ஏதாவது ஒரு காரியத்தை செய்கிறார்கள் என்றால் அது சரி என்று ஒத்துக்கொள்ளப்படுகிறது இந்த காரணத்தினாலேதான் எல்லா இடங்களிலேயும் உண்மையற்ற காரியங்களையும் ஒழுக்கக்கேடான காரியங்களையும் நாம் பார்க்கிறோம். சரி என்பதும் **தவறு** என்பதும் ஒன்றோடு ஒன்று உறவுள்ள வார்த்தைகள் என்று எண்ணிக்கொள்கிறோம். இல்லை **ஒளியும் இருளும்** எப்படி வெவ்வேறோ அதுபோல **நீதி** வேறு அநீதி **வேறு.**

நியாயம் நாம் பல நேரங்களில் தீர்மானம் எடுக்க வேண்டியதிருக்கிறது. ஒவ்வொரு விசுவாசியும் பல நேரங்ளில் எந்த திசையில் செல்லவேண்டும் எதைச் செய்ய வேண்டும் என்று தீர்மானம் எடுக்க வேண்டியதிருக்கிறது. கர்த்தருடைய ஊழியத்திற்குத் தங்களை அர்ப்பணித்தவர்களும் இரண்டு மூன்று இடங்களில் ஊழியம் செய்ய வாய்ப்பு கிட்டும்பொழுது எங்கே ஊழியத்திற்குச் செல்வது என்பதைக் குறித்து தீர்மானிக்க வேண்டியதிருக்கிறது. கர்த்தருடைய பாதத்தில் அதை வைத்து கர்த்தருடை தெளிவான வழிநடத்துதலை புரிந்து தீர்மானம் எடுக்கவேண்டும் அவர்கள் நியாயமான சரியான தீர்மானத்தைச் செய்யவேண்டும்.

**நிதானம்** இது ஒரு விதிமுறை இது நடக்கை அல்ல. கர்த்தருடைய பிள்ளைகள் கட்டளைக்களுக்குக் கீழே வைக்கப்படவில்லை. அதைவிட உயர்வான விதிமுறைகளினால் வழிநடத்தப்படுகிறார்கள். ரோமர் 14ம் அதிகாரம் 22ம் வசனத்தில் உனக்கு விசுவாசமிருந்தால் அது தேவனுக்கு முன்பாக உன்மட்டும்

இருக்கட்டும். நல்லதென்று நிச்சயித்த காரியத்தில் தன்னைக் குற்றவாளியாக்காதவன் பாக்கியவான் என்று வாசிக்கிறோம். ஒரு விசுவாசி தான் செய்யும் எந்த ஒரு காரியத்தைக் குறித்தும் நிச்சயமுள்ளவனாக உற்சாகமுள்ளவனாகக் காணப்பட வேண்டும்.

பலர் கிறிஸ்தவ வாழ்க்கை என்றால் **முட்டை உடையாமல் முட்டையின்மேல் நடப்பது** என்று சொல்கிறார்கள்ள. நாம் இதைச் செய்யலாமா, செய்யக்கூடாதா என்ற குழப்பத்தில் வாழ்கிறார்கள். இங்கே அடிப்படையான விதிமுறை என்னவென்றால் எந்தக் காரியத்தை முழு மனதோடு உற்சாகத்தோடு சந்தோஷத்தோடு உங்களால் செய்யமுடியாதோ அதை நீங்கள் செய்யக்கூடாது. எந்தக் காரியத்தை செய்தாலும் எதிர்பார்ப்போடு மகிழ்ச்சியோடு சந்தோஷத்தோடு உற்சாகத்தோடு செய்யவேண்டும். நாம் செய்கிற காரியம் சரியான காரியம் என்ற நிச்சயத்தோடு நாம் முன்நோக்கிச் செல்ல வேண்டும். **இதுதான் நிதானிப்பது.** எந்த ஒரு காரதியத்தை செய்து முடித்த பின்னரும் ஏன் இதை செய்தோம் என்ற எண்ணம் வரக்கூடாது. ஐயோ இதை நான் செய்யாமல் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே என்று எண்ணக்கூடாது. அப்படி எண்ணுவீர்கள் என்றால் அதை நீங்கள் செய்வது தவறு. வேத வசனங்கள் பதில் தராமல் இருக்கும் கேள்விக்குரிய கேள்விகளுக்கு, காரியங்களை தவிர்ப்பதே ஒரு விசுவாசிக்கு நல்லது.

நேற்றைய தினத்தில் நீங்கள் செய்த ஒவ்வொரு காரியத்தையும் நினைக்கும்பொழுது அல்லேலூயா . நேற்று எனக்கு ஒரு சிறந்த நாள் என்று சொல்லமுடியும் என்றால் நீங்கள் செய்த காரியங்கள் சரியானது. **இதற்கு நிதானம் தேவை** இப்படிப்பட்ட காரியங்களை நிதானிப்பதற்கு நீதிமொழிகள் நமக்கு உதவி செய்கிறது.

அடுத்ததாக நாம் நம்மை நாமே பிரியப்படுத்தாமல் மற்றவர்களுடைய விருப்பு வெறுப்புகளையும் கவனிக்கவேண்டும். இந்த குறிப்பிட்ட காரியத்தை நான் செய்யும்பொழுது **என் சகோதரனுக்கு** அண்டை **வீட்டாருக்கு** பிற **விசுவாசிக்கு** இடையூறாக அவர்களைத் **துக்கப்படுத்துகிறதாக** இருக்குமோ என்பதை கவனிக்க வேண்டும். இதற்கும் ஒரு விசுவாசிக்கு விவேகம் தேவை. அந்த விவேகத்தை இந்த நீதிமொழிகளின் புத்தகம் கொடுக்கிறது.

**பேதைகளுக்கு வினாவையும்** கொடுக்கிறது. அதாவது அறிவில் குறைந்தவர்களுக்கு எதைச் செய்வது எதைச் செய்யக்கூடாது என்கிற ஞானத்தை நீதிமொழிகள் கொடுக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகள் மதியீனமான காரியங்களைக்

செய்யக்கூடாது. ஒரு கணவன் மனைவி ஒரு முறை தூரமான ஒரு இடத்திற்கு கர்த்தருடைய ஊழியத்திற்காகச் செல்லும்படிக்கு ஆலோசனை பெற்றுக்கொள்ளுபடியாக போதகரிடத்தில் வந்தார்கள். அவர்கள் வாழ்க்கையின் சூழ்நிலைகளையெல்லாம் விசாரித்த ஊழியர் இப்படிப்பட்ட சூழ்நிலையில் தூரமான இடத்திற்கு நீங்கள் ஊழியத்துக்கு செல்ல வேண்டியதில்லை. அருகிலேயே நீங்கள் ஊழியம் செய்யலாம் என்று கூறினார். ஆனால் அவர்களோ போதகருடைய ஆலோசனையைக் கேளாமல் **அவசரப்பட்டுத் தூரமான இடத்திற்குச் சென்றார்கள்.** ஆனால் மிகச் சீக்கிரமாகவே தோல்வியைத் தழுவியவர்களாகத் திரும்பிவந்தார்கள், தங்கள் சூழ்நிலைகளைக் குறித்து தாங்களே கேள்விகளை எழுப்பி தீர்மானம் எடுத்திருந்தால் அப்படிப்பட்ட ஒரு நிலைமை அவர்களுக்கு வந்திருக்காது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து **சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களும்** புறாக்களைப்போலக் **கபடற்றவர்களுமாய் இருங்கள்** (மத்தேயு 10:6) என்று கூறியிருக்கிறார்.

**வாலிபருக்கு அறிவையும் விவேகத்தையும் கொடுக்கும்** அறிவு என்பது அறிந்திருக்க வேண்டிய பயனுள்ள காரியங்களைக் குறிக்கிறது. ஒரு கல்லூரியின் கருப்பொருள் அறிவுக்கடுத்தது அறிவை எங்கே பெற்றுக்கொள்ளலாம் என்பதை அறிந்திருப்பதேயாகும். எனவேதான் நாம் ஒவ்வொருவரும் எப்பொழுதும் வேத புத்தகத்தை கையில் வைத்துக்கொள்ளவேண்டும். அதை வாசித்துக்கொண்டும் இருக்க வேண்டும் இதை நீங்கள் அறியவில்லையென்றால் அறிவை எங்கே பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதையும் நீங்கள் அறியீர்கள்.

**விவேகம்** எந்த ஒரு காரியத்தையும் சிந்தித்துச்செயலாற்றுவது. ஒவ்வொரு வாலிபத் தம்பியும் தங்கையும் இந்த குணநலனைப் பெற்றிருக்க வேண்டும். இந்த தலைமுறை வாலிபர்கள் எதையும் தீர சிந்திக்காமல் உடனடியாகத் தலையிடுகிறார்கள். விவேகமுள்ள கிறிஸ்தவர்களைக்காண்பது மிக அற்புதமானது. நீங்கள் குளிர் பிரசேத்திற்கு வேலைக் காரியமாக செல்ல தயாராகும்போது உங்கள் நண்பர் உங்களுக்கு கம்பளி ஆடையைக் கொடுப்பார் என்றால் அதுதான் விவேகம் இன்றைக்கு விவேகமுள்ள பல விசுவாசிகள் இருக்கிறார்கள். நாம் எல்லாருமே விவேகமுடையவர்களாக இருக்க வேண்டும். இதற்கு உதவி செய்வது நீதிமொழிகளின் புத்தகம்

## சவால்

**நீதிமொழிகள் 1:5**

எல்லாப் பெரிய மனிதர்களின் குணநலன்களும் இதுதான் அப்படிப்பட்டவர்கள் எந்த

ஒரு காலகட்டத்திலேயும் நான் எல்லாவற்றையும் அறிந்துவிட்டேன். இனி கற்றுக்கொள்வதற்கு எதுவும் இல்லை என்ற நிலைமைக்கு வரமாட்டார்கள். சிலர் அந்த குறிப்பிட்டத் துறையில் தங்களுக்குத்தான் எல்லாம் தெரியும், தாங்கள் அறிந்துகொள்ள வேண்டியது எதுவுமே இல்லை என்பதுபோலப்பேசுவார்கள். அது பெருமையை வெளிப்படுத்துகிறது. ஆனால் நீதிமொழிகள். **ஞானமுள்ள மனிதன் தொடர்ந்து கற்று அறிவில் தேறுவான்** என்று சொல்கிறது. இந்த முழு புத்தகமும் நமக்குக் கற்றுப்கொடுக்கிற சவால் இதுதான் புத்திமான் இந்த நீதிமொழிகளைக் கேட்டு தேறுவான்.

## நீதிமொழிகள் 1:6

இதே சத்தியத்தை எடுத்துச்சொல்லும் மற்றும் ஒரு வசனம் **காரியத்தை மறைப்பது தேவனுக்கு மேன்மை காரியத்தை ஆராய்வதோ ராஜாக்களுக்கு மேன்மை** (நீதிமொழிகள் 25:2) தேவன் மிகத் தெளிவாக நற்செய்தியை கூரையின் மேலிருந்து கூறி அறிவிக்கும்படியாகக் கொடுத்திருக்கிறார். ஆனால் கர்த்தருடைய வார்த்தையில் அநேக சத்தியங்கள் வைரத்தைப்போல் இருக்கிறது. தேவன் வைரக் கற்களை பூமியின் மீதெங்கும் ஆங்காங்கே வீசி எறியவில்லை விலைமதிக்க முடியாத எல்லாக் காரியங்களையும் மனிதன் தேடி கண்டுபிடிக்கும்படியாக மறைவாகவே வைத்திருக்கிறார். பொன்னும் வைரங்களும் தோண்டி எடுக்கபட வேண்டியவைகளாக இருக்கின்றன. பல வகையான எண்ணெய்கள் பூமியிலே குழியிட்டு எடுக்கப்படவேண்டும். தேவனே அவைகளை அவ்வாறு செய்திருக்கிறார்.

## காரியத்தை மறைப்பது தேவனுக்கு மேன்மை.

கர்த்தருடைய வார்த்தைகளையும் மிக கவனத்தோடு ஆராய்ந்து படிக்க வேண்டும் எனவேதான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வேத வாக்கியங்களை **ஆராய்ந்து பாருங்கள்.** அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு என்று இயேசு கிறிஸ்துவை கண்டுகொள்ளவில்லையென்றால் நீங்கள் இயேசு வைரத்தை இன்னும் சரியானபடி தோண்டி எடுக்கவில்லை, நீதிமொழிகளைப் புரிந்துகொள்வதற்கு அதின் அர்த்தத்தை விளங்கி கொள்ளவதற்கு ஞானியின் வார்த்தையைச் சரியாய் அறிந்துகொள்வதற்கு இன்றும் அழமாய்த் தோண்டவேண்டும். இன்னும் கவனமாய் படிக்க வேண்டும். மிகவும் உன்னதமான சத்தியங்களை தேவன் நமக்கு கொடுத்திருக்கிறார். ஆனால் இந்நாட்களில் பரிதாபமான நிலை என்னவென்றால் பல செய்தியாளர்களும் ஆலயத்திற்கு வருகிறவர்களும் வேத வசனத்தைக் குறித்த அறிவற்றவர்களாகத் காணப்படுகிறார்கள்.

வேத வாக்கியத்தைக் கற்றுக்கொள்வதற்கு மிக அக்கறையோடு ஜாக்கிறதையோடு

செயல்படவேண்டும். சிலர் மேலோட்டமாக வேதப் புத்தகத்தில் வாசகங்களை வாசித்தால் போதும் என்று எண்ணுகிறார்கள். ஆழமாக வேத வசனங்களைப் படிக்காமல் உள்ளே இருக்கிற கடினமான ஆனால் ருசியான சத்தியங்களை அறிந்துகொள்ள முடியாது. விஞ்ஞானிகளை சற்றே எண்ணிப்பாருங்கள். ஒரு குறிப்பிட்ட காரியத்தைக் கண்டுபிடிப்பதற்காக எத்தனையோ ஆயிரக்கணக்கான ஆராய்ச்சிகளில் எத்தனையோ தோல்விகளை அவர்கள் கண்டாலும் ஒரு நாள் வெற்றி பெறுகிறார்கள். மிக சாதாரணமான பொருட்களிலிருந்து நாம் எண்ணிப்பார்க்க முடியாத கண்டுபிடிப்புகளும், விஞ்ஞானிகள் கண்டுபிடிதத்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு வேத வசனம் எவ்வளவு குறைவாக ஆராய்ந்து அறியப்படும் ஒன்றாக இருக்கிறது இல்லையா?

தங்கள் வாழ்க்கையில் **அற்புதம் நடக்கும்** அதிசயம் **நடக்கும்** உலக **ஆசீர்வாதம்** கிடைக்கும் என்றால் அதைக்குறித்து கேட்க **கூடுகிற கூட்டம் பெரிதாக இருக்கிறது.** வேதத்தை ஆராய்ந்து படிப்போம். வாருங்கள் என்றால் அங்கே வருகிறவர்கள் மிகக் குறைவு. காரணம் என்ன? மனிதனுக்கு **அறிவின் மேல்** விவேகத்தின் மேல் **வாஞ்சை இல்லை**. இன்று நீதிமொழிகள் நமக்குக் கொடுக்கும் ஒரு சவால் என்னவென்றால் 2 தீமோத்தேயு 2ம் அதிகாரம் 15ம் வசனத்தில் பவுல் நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு என்று குறியிருக்கிறார்.

## கருத்து வசனம்

**நீதிமொழிகள் 1:7**

இங்கே எதிர்மறையான காரியங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. **கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்** என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே வேளையில் **மூடர் ஞானத்தையும்** போதகத்தையுதிம் அசட்டை பண்ணுகிறார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது மூடர் கர்த்தரையும் அவருக்கு பயப்படும் பயத்தையும் அசட்டை செய்கிறார்கள். ஒரு நபர் தனது காரில் மிக வேகமாக சாலையில் சென்று கொண்டிருந்தார். திடீரென்று ஒரு சக்கரத்தில் காற்றுப்போய்விட்டது. ஆகவே மிக மெதுவாக சாலை ஓரத்தில் கொண்டுவந்து நிறுத்தினார். அந்த இடம் சுத்தமான இடம் இல்லை. தன்னுடைய சக்கரத்தின் நட்டுகளை எல்லாம் கழற்றி வீல்கேப் என்று சொல்வார்கள் அல்லவா அதின்மேலே வைத்துவிட்டு வேலை செய்துகொண்டு இருந்தார். திடீரென்று கைபட்டு அந்த நட்டுகளெல்லாம் அருகில் இருந்த சாக்கடையில் விழுந்து விட்டன. அதுமிகவும் ஆழமானதாகவும் அருவருப்பானதாகவும் இருந்தபடியினால் அதை

எடுக்காமல் என்ன செய்வது என்று திகைத்துக்கொண்டிருந்தார். இவர் நின்றுகொண்டிருந்த இடத்திற்கு அருகே மனநலம் குன்றியவர்களின் காப்பகம் இருந்தது.

இவர் செய்கிற எல்லா காரியங்களையும் காப்பகத்தில் இருந்து ஒரு மனிதர் கவனித்துக்கொண்டிருந்தார். இந்த கார் சொந்தக்காரர் இப்படி திகைத்து நிற்பதைப்பார்த்து அந்த மனிதர் மற்ற ஒவ்வொரு சக்கரங்களிலிருந்தும் ஒவ்வொரு நட்டை எடுத்து இந்த சக்கரத்தின்மேல் பொருத்தி சற்றுக் தூரம் கொண்டு செல்லுங்கள். அங்கே கடைகள் உண்டு. மேலும் நட்டுகளை நீங்கள் வாங்கிக்கொள்ளலாம் என்று கூறினார். காரை ஓட்டிக்கொண்டு வந்தவருக்கு இது ஆச்சரிமாக இருந்தது. எனக்கு இந்த அறிவு வரவில்லையே என்று வியந்தார். அப்பொழுது பாதையின் மறுபக்கம் இருந்தவர். **நான் பைத்தியம்தான்** ஆனால் **முட்டாள்** அல்ல என்று கூறினாராம்.

நாம் மூடர்களாக இல்லாதபடி இந்த நீதிமொழிகளின் புத்தகம் நமக்கு விலையேறப்பெற்ற அறிவையும் ஞானத்தையும் விவேகத்தையும் தருகிறது.

**நீதிமொழிகள் 1:8,9**

இது முக்கியமான ஒரு குடும்ப உறவைக் குறித்துப்பேசுகிறது. அநேகருக்கு தேவனுக்குப் பயப்படும் பயமுள்ள பெற்றோர்கள் இருக்கலாம். பெற்றோர்களால் சிறந்த முறையில் போதிக்கப்பட்டிருக்கலாம். அப்படிப்பட்டவர்கள் பெற்றோர்களால் கற்றுக்கொடுக்கப்பட்ட காரியங்களிலிருந்து வழி விலகிப் போகிறதில்லை. அதே வேளையில் தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல போதனைகளைக் கொடுத்து வளர்க்காத பெற்றோர்களையும் கர்த்தரே கிருபையாகக் காத்துகொள்வராக.

## வீட்டிற்கு வெளியே இருந்து வரும் சோதனை

**நீதிமொழிகள் 1:10**

இது வீட்டிற்கு வெளியே உள்ள சூழ்நிலையைக் குறிக்கிறது. இளைஞனான ஒரு மனிதன் வீட்டைவிட்டு வெளியே செல்லும்பொழுது அவன் சந்திக்கும் முதல் நபர் யார் யார்? பொதுவாக அவன் சந்திக்கக்கூடிய சாதாரணமான ஒரு மனிதன் தேவனை அறியாத ஒரு மனிதனாகவே இருக்கிறான். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவண்டை வராத மனிதனாக இருக்கிறான். நாம் எல்லாரும் பாவிகள். ஆனால் வீட்டைவிட்டு வெளியே செல்லும் ஒரு மனிதன், மீட்கப்படாத ஒரு பாவியைச் சந்திக்குபொழுது என்ன செய்ய வேண்டும் ? இங்கே சொல்லப்பட்டிருக்கிற ஆலோசனை என்ன? வீட்டைவிட்டு வெளியே போகிற மகனே, பாவிகள் உனக்கு நயங்காட்டினாலும் நீ சம்மதியாதே. நீதிமொழிகள் ஒவ்வொன்றும்

வேதபுத்தகத்தில் உள்ள வெவ்வேறு மனிதர்களை நமக்கு நினைப்பூட்டும் என்று பார்த்தோம். உங்களுடைய நண்பர்களைக் குறித்துப்பேசும் நீதிமொழிகளை நீங்களே இங்கு பார்க்கலாம். ஒருவேளை அதைக்குறித்து அவர்களிடத்தில் நீங்கள் பேச தயங்கினாலும் அந்த வசனத்தை வாசிக்கும்போதெல்லாம் அவர்கள் முகங்களே உங்கள் கண்கள் முன்னால் வரும்.

இந்த வசனத்தை வாசிக்கும்பொழுது நம்முடைய நினைவிற்கு வருவது யோசேப்பு. அவன் அடிமையாக எகிப்து தேசத்தில் வாழ்ந்தாலும் போத்திபாரின் மனைவி நித்தம் நித்தம் அவனைக் தொந்தரவு செய்தாலும் அவனுடைய வார்த்தைக்கு அவன் கீழ்ப்படியவில்லை அவனுடைய அனுபவத்தைத்தான் இந்த வசனம் கூறுகிறது.

**நீதிமொழிகள் 1:11-13**

பாவிகளை மனிதர்கள் ஒன்றுமில்லாத சூழ்நிலையிலிருந்து செல்வதையும், பொருட்களையும் பெற்றுக்கொள்வதற்கு தீமைகனை திட்டங்களை வைத்திருக்கிறார்கள். அடுத்தவர்களைக் கஷ்டப்படுத்தித் தாங்கள் செழிப்பாக வாழ ஆசைப்படுகிறார்கள்.

**நீதிமொழிகள் 1:14**

இப்படிப்பட்ட கொள்கையுடையவர்கள் தாங்கள் எதையுமே செய்ய மனமற்றவர்களாக இருப்பார்கள். நன்றாக வேலை செய்கிறவர் தங்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று எண்ணுவார்கள் இது தவறான கொள்கை. ஆனால் இன்று இளைஞர்கள் மத்தியில் இது பரவலாகக் காணப்படும் கொள்கையாக இருக்கிறது. தவறான இந்த வழியைப் பயன்படுத்தி ஒன்றும் இல்லாதவர்கள் குறுக்கு வழியிலும் முரட்டு வழியிலும் சம்பாதிக்கிறார்கள்.

அப்பொழுது வெர்ணனுக்கு வயது 14 தொழிற்சாலையில் வேலை செய்துகொண்டிருந்த அவருடைய தகப்பனார் தொழிற்சாலையில் ஏப்பட்ட விபத்தில் மரித்துப்போனார். தாயோடு கூட தாயாரின் ஊருக்கு வந்தார். அங்கே ஒரு பெரிய கடையில் வேலைக்குச் சேர்த்தார். அந்த கடையில் எல்லாவிதமான பொருட்களையும் மொத்தமாக விற்பனை செய்யும் ஒரு வியாபாரம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அங்கே வேலை செய்துகொண்டிருந்த அவரைப்போன்ற வயதிலிருந்த மற்ற சிறுவர்கள் ஒவ்வொரு நாளும் பெரிய பெட்டியிலிருந்த மிட்டாயை சிறிய பெட்டிகளில் அடைக்கும்பொழுது திருடினார்கள். முதல் நாள் வெர்ணனும் அவ்வாறே செய்தார். ஆனால் அன்று இரவே அது சரியானதல்ல என்பதை அவருடைய உள்மனம் தெளிவாகக்கூறியது. ஆனாலும் மிட்டாயைத் திரும்பக் கொடுக்க முடியவில்லை, ஏனென்றால் அதைச் சாப்பிட்டுவிட்டார். ஆனால்

அவருக்குக்கொடுக்கபட்ட ஒரு சிலாக்கியம் என்ன தெரியுமா? மொத்த வியாபாரிகளுக்குக் கொடுக்கும் விலையிலேயே ஆறு மிட்டாய்கள் அடங்கிய சிறிய பெட்டி அவருக்கு கிடைத்தது. அதில் ஐந்து மிட்டாய்களை அங்கே வேலை செய்கிறகளுக்குக் குறைவான விலையில் அவர் விற்றார். அவருக்கென்று ஒரு மிட்டாய் கிடைத்தது அதற்கும் அவர் கடினமாக உழைக்க வேண்டியதிருந்தது. உழைக்காமல் வரும் வருமானத்தை வாஞ்ஜிக்கிறவன் ஞானவானல்ல. அப்போஸ்தலனாகிய பவுலும் மிகத் தெளிவாக **வேலை செய்யாதிருக்கிறவன் சாப்பிடாதிருக்ககக்கடவன்** என்று கூறியிருக்கிறார். நீதிமொழிகளின் புத்தகம் பாவிகள் நயம் காட்டும்பொழுது அது தவறானது என்பதை உணர்ந்துக்கொள்ளச் செய்கிறது.

எங்ளோடே பங்காளியாயிரு நம்மெல்லாருக்கும் ஒரே பை இருக்கும். - இது தவறான பாதையில் இழுத்துச் செல்கிறது. கர்த்தருடைய ஞானம் பொருளாசை எவ்வளவு கேடானது என்பதை நாம் உணர்ந்துகொள்ள செய்கிறது.

**நீதிமொழிகள் 1:15**

இப்படி பிரித்தெடுக்கப்பட்டவர்களாக வாழ்வதைக் குறித்து வேதம் மிகத் தெளிவாக கூறுகிறது. **துன்மார்க்கருடைய** ஆலோசனையின்படி நடவாமலும் **பாவிகளுடைய** வழியில் நில்லாமலும் பரியாசக்காரர் உட்காரும் இடத்தல் உட்காராமலும் இருக்க வேண்டும். ஆனபடியால் நீங்கள் **அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய்** அசுத்தமானதைத் **தொடாதிருங்கள்** என்று கர்த்தர் சொல்லுகிறார் (கொரிந்தியர் 6:17) உங்கள் பள்ளியிலோ அலுவலகத்திலோ தவறான வழியில் செல்கிறவர்களை நீங்கள் திட்டமாய் அறிவீர்கள் என்றால் அவர்களைவிட்டு நீங்கள் தூரமாக இருப்பது மிகவும் நல்லது பள்ளியில் என்னோடுகூட இத்தனை ஆண்டுகள் அவர்கள் வேலை செய்துவிட்டார்களே. அவர்கள் சொல்லை நான் எப்படித் தட்டுவது. இவர்கள் என் மாறுதலுக்கு உதவி செய்திருக்கிறார்களே **அவர்களுக்கு ஒத்துக்போகாமல்** நான் எப்படி இருக்க முடியும் என்று நினைப்பீர்கள் என்றால் **கர்த்தருடைய வார்த்தையை** நீங்கள் மறுக்கறீர்கள்.

**நீதிமொழிகள் 1:16-18**

இப்படிப்பட்டவர்களுடன் இணைந்து, இப்படிப்பட்டவர்கள் செய்யும் வேலையைச் செய்யத் துணிவீர்கள் என்றால் உங்களுக்கு நீங்களே அழிவை உண்டாக்கி கொள்கிறீர்கள். நீங்கள் விரிக்கும் வலையில் நீங்கள் விழப்போகிறீர்கள்.

**நிதிமொழிகள் 1:19**

பொருளாசையைக் குறித்து முதலாவது நமக்குக் கொடுக்கப்பட்டும் ஒரு எச்சரிப்பு ,

உலகமே பொருட்களுக்குப் பின்னால் ஓடும் காலத்தில் இருக்கிறோம். முனைவர் பட்டம்பெற்ற ஒரு கல்லூரி பேராசிரியர் மிகத் தெளிவாக, இங்கே கல்லூரிகளும் மக்களைப் பொருளாசைக்கு நேராய் வழிநடத்துகிறது அதை விட்டுவிட்டுக் கல்லூரிகள் தேவனைத் தேடுகிறதாக மாறவேண்டும் என்று எச்சரித்திருக்கிறார். இன்று சிலர் பொருளாசையிலிருந்து விழித்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் இந்தக் காலத்தில் உலகத்தில் காணப்படும் மிகப்பெரிய பாவம் மிக அதிகமானோர் செய்யும் ஒரு பாவம் **பொருளாசை** என்று இந்த வசனம் கண்டிருக்கிறது.

**நீதிமொழிகள் 1:20**

ஞானம் வெளியே நின்று இளைஞர்களைக் கூப்பிட்டு பள்ளிக்கு வாருங்கள் ஞானத்தை பயிலுங்கள் என்று அழைக்கிறது.

**நீதிமொழிகள் 1:21,22**

நீங்கள் எவ்வளவு காலம் பேதமையாக இருக்கபோகிறீர்கள். பேதமையாக இருப்பது மதியீனமான காரியம் 20 வயது வாலிபன் ஒருவன் கடந்த மூன்றாண்டு காலமாக நான் போதை மருந்திற்கு அடிமைப்பட்டிருந்தேன். நான் எவ்வளவு முட்டாளாக இருந்திருக்கிறேன். எவ்வளவு மதியினமான காரியத்தைச் செய்திருக்கிறேன். என்று கூறினான், இங்கே ஒரு கேள்வி எழும்புகிறது. நீங்கள் எவ்வளவு காலம் பேதையாக இருக்கப்போகிறீர்கள் ? எப்பொழுது ஞானத்தை அறிந்துகொள்ளப்போகிறீர்கள் ?

ஞானம் என்றால் என்ன ? அறிவைச் சரியான முறையில் அறிய அறிந்திருப்பதே ஞானம். ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால் யாவருக்குப் சம்பூரணமாய்க் கொடுக்கிறவனும் ஒருவரையும் க டிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன். அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும் என்று யாக்கோபு மிகத் தெளிவாக எழுதியிருக்கிறார். (யாக்கோபு 1:5) நமக்கு தேவனுடைய ஞானம் வேண்டும் என்ற வாஞ்சை இருந்தால்தான் அந்த ஞானத்தை நாம் கர்த்தரிடத்தில் தேட முடியும் கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்

**நீதிமொழிகள் 1:23 28**

இங்கே ஞானமே தொடர்ந்து கூப்பிட்டுப் பேசுகிறது நீங்கள் என்னைத் தேடி கண்டடையாவிட்டால் நானும் உங்கள் ஆபத்துக் காலத்தில் நகைப்பேன். நீங்கள் பயப்படும் காரியம் புயல்போல் வரும்பொழுது நான் ஆகடியம் பண்ணுவேன். அப்படிப்பட்ட நேரத்தில் என்னை நோக்கிக் கூப்பிடுவார்கள். நான் மறுஉத்தரவு கொடுக்கமாட்டேன். அதிகாலையில் என்னைத் தேடினாலும் என்னை கண்டடையமாட்டார்கள் ஏன் ஞானம் அவ்வாறு சொல்கிறது? அவர்கள் அறிவை வெறுத்தார்கள், கர்த்தருக்குப் பயப்படுதலைத்

தெரிந்துக்கொள்ளாமல் பேனார்கள். கர்த்தருக்குப் பயப்படுதலைத் தெரிந்துகொள்ளும் பொழுது ஞானம் நம் வாழ்க்கையில் ஆரம்பமாகிறது.

**நீதிமொழிகள் 1:29-32**

கிறிஸ்வுக்கு முதுகு காட்டுவது. ஞானமாகிய அவரை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பது ஆவிக்குரிய தற்கொலை

**நீதிமொழிகள் 1:33**

எவ்வளவு அழகான ஒரு விளக்கம் இல்லையா? இன்று பலர் செல்வச்செழிப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். வங்கியில் இவ்வளவு பணம் இருக்கிறது என்பதைக் குறித்து மிகுந்த அக்கறை பாராட்டுகிறார்கள். ஆனால் ஞானத்தையோ கர்த்தருக்குப் பயப்படுத்தலையோ குறித்து எண்ணமற்றவர்களாக இருக்கிறார்கள். நம்முடைய வாழ்க்கையில் கர்த்தருக்குப் பயப்படும் பயம் உண்டா? கர்த்தருக்குப் பயப்படும் பயம் உண்டா? கர்த்தருக்குப் பயப்படுவோம் என்றால் ஆபத்திற்குப் பயப்படாமல் அமைதியாக இருக்க முடியும்.

குறிப்பு : மேலே வாசித்த **நீதிமொழிகள்** வேத ஆராய்ச்சி WRT என்ற ஸ்தாபனம் நடத்தும் வானொலி -TV ஆகியவை மூலமாக ஒலிபரப்பப்பட்டது. இதன் பொருளாளர் **Rev. ரபீந்திரநாத் சாமுவேல்** அவர்கள் எழுதியது, வானொலியிலும TVயிலும் இவர் பேசுவது பலருக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

நீதிமொழிகள் போன்ற **வேத ஆராய்ச்சி** புஸ்தகங்கள் மற்றும் மற்ற விவரங்கள் அறிய கீழ்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளலாம்,

**TWR INDIA,**
2nd Street, Luke Nagar, Maharaja Nagar P.O.,
**Tirunelveli Dt.** 627 011 Cell : 9442252627

## ONLINE BANKING (NEFT)

***Name : M G E PUSHPARAJ***

**STATE BANK OF INDIA**

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 **A/C No: 10764116842**
SWIFT CODE - SBININBB300 **A/C No: 10764116842**

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622. **A/C No: 1219101013622.**
SWIFT CODE - CNRB0001219 -1219101013622. **A/C No: 1219101013622.**



# எனது நினைவலைகள்

அகஸ்டின் ஆசீர்


தூத்துக்குடி நற்செய்திப் பணி விழா சிறப்பாக நடந்துகொண்டிருந்தது. அந்தப் பேரயத்தின் தலைவர்கள் ஆயத்தங்களை நல்ல முறையிலே செய்திருந்தார்கள். பண்டிதர் **அக்பர் ஹக்,** பண்டிதர் பில்லி கிரகாமின் இணை நற்செய்தியாளர் ஆண்டவருடைய செய்தியைத் தருவதற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

போதகர்களும், அகஸ்டன் ஆசிர் ஆகிய நானும் அவரும் மேடையில் அமர்ந்திருந்தோம். திடீரென்று கூட்டத்தின் முன்பகுதியில் ஒரே சலசலப்பு. முன் வரிசையில் அமர்ந்திருந்த நான்கு பெண்கள் தலைமுடியை விரித்துப்போட்டு ஆடிக்கொண்டிருந்தார்கள். **அசுத்த ஆவியினால்** அவர்கள் ஆட்கொள்ளப்பட்டிருந்தார்கள் என்பது தெளிவாக தெரிந்தது. கூட்டத்தில் அமர்ந்திருந்த அனைவரும் அதையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஒரு சிலர் மட்டுமே பாடினார்கள்.

இதை ககவனித்த **அக்பர் ஹக்** என்னைப் பார்த்து **அகஸ்டின் நீ என்னொடு வா.** என்றார். உடனே நானும் அவரும் மேடையிலிருந்து கீழே இறங்கினோம். அவர் ஒரு சாம்பியனைப்போல முன்னே நடந்தார். நான் கொஞ்சம் பயந்துபோய் விலகி நடந்தேன். முன் வரிசைக்குச்சென்ற அவர் **சத்தமாக ஒரு ஜெபம் செய்தார்.** அவர் ஆங்கிலத்தில் பேசின வார்ததைகளில் தமிழாக்கம் **ஆண்டவரே ! அசுத்த ஆவிகள் இந்தக்கொண்களைவிட்டு விரட்டும்.** இயேசுவின் **நாமத்திலே ஆமென்** அவ்வளவுதான். அந்த நான்கு பெண்களும் அமைதியாக உட்கார்ந்து மற்றவர்களோடு சேர்ந்து பாடத் தொடகினார்கள்.

பொதுவாகப் **பிசாசுகளை** விரட்டும் ஊழியர்கள் **பிசாசு பிடித்த** மனிதரின் **தலைமுடியைப்** பிடித்து ஆட்டி **சத்தமாக ஜெபிப்பார்கள்.** அந்த விதமாக எதுவும் இங்கே நடைபெறுவில்லை. **அமைதியான ஜெபம்தான்** அன் விளைவு **அசுத்த ஆவிகள் ஓடிவிட்ன.** இது எனக்கு சிறப்பான பாடம் விசுவாசிகளாகிய நமக்குமுன் **பிசாசுகள்** எதிர்த்து நிறக முடியாது. தேவனுக்குக் கீழ்படிந்திருங்கள் **பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்.** அப்பொழுது அவன் உங்களை விட்ன் ஓடிப்போவான் (யாக்கோபு 4:7)

# கிறிஸ்தவர்களுக்கு அதிக கல்லறைகள்



மும்பையில் **கிறிஸ்தவர்கள் எதிர்கொள்ளும் கல்லறைகள்** மற்றும் புதைகுழிகள் பற்றாக்குறை குறித்த கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதமாக தொழில்துறை அமைச்சர் உதய் சமந்த் மாநில சட்டமன்றத்தில் மேம்பாட்டுத் திட்டத்தில் இந்த நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலத்தை 90 நாட்களுக்குள் அடையாளம் காணவும் வளங்கள் கிடைக்கச் செய்யவும் B.M.C. க்கு உத்தரவிடப்படும் என்று தெரிவித்தார்.

*– டைம்ஸ் ஆப் இந்தியா*

APRIL 2025

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.